35



தமிழ் இலைச் சங்கம்

1949–50



THAT *Fulfils* YOUR NEEDS IN PRINTING

AND

BLOCK MAKING

HALFTONE, LINE

LINE & HALFTONE

AND

TRI-COLOUR

BLOCKS.

DIE & COPPER PLATE PRINTING.





COMMERCIAL PRINTING & PUBLISHING HOUSE..
(PRINTERS & BLOCKMAKERS)
46, ARMENIAN ST... MADRAS

PHONE 4037

Post Box No. 1569.

Telegrams : "PRINTHOUSE"

Printed at Commercial Printing & Publi hing House, 46, Armenian Street, Madras 1.



ஜெமினி ஸ்டூடியோஸ்

தயாரித்த

"அபூர்வ சகோதரர்கள்"

பாட்டுகள்

பானுமதி & பார்ட்டி

N. 28130

லட்டு லட்டு (2 பாகங்கள்)

(சமையற்கட்டு பாட்டு)

★

ப. பானுமதி	பி. பானுமதி	கோரஸ்
N. 28131	N. 28132	N. 28133
மன மோஹனமே	மானும் மயிலும்	மாயா விந்தை
பானுமதி & 'விஜயசிம்ஹன்'	ஜூலே மை லால் ஜூலாவே	பரதேசமே போகாதே
ஆஹா ஆடுவேனே	("நிஷான்")	

ஜெமினி ஸ்டூடியோஸ்

தயாரித்த

"நிஷான்"

பாட்டுகள்

(அபூர்வ சகோதரர்கள்-ஹிந்தி பதிப்பு)

N.14428 to N.14432





"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

கிராமபோன் கம்பெனி லிமிடெட், கல்கத்தா * பம்பாய் * மதுரை * டில்லி

இந்தியன் மெர்க்கண்டைல்

இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

(ஸ்தாபிதம் 1907)

தலைமை ஆபீஸ்: பம்பாய்.

கிளை ஆபீஸ்: கோயமுத்தூர்.

ஆயுள், தீ, கப்பல், மோட்டார், விபத்து

முதலிய இன்ஷ்யூரன்ஸுகள் வழங்கப்பெறுகின்றன.

கம்பெனியின் சில சிறந்த அம்சங்கள்.

- ☆ உன்னதமான பொருளாதார நிலை
- ☆ திறமைமிக்க டைரெக்டர்கள்
- ☆ சிக்கனமான நிர்வாகம்
- ☆ பலவகைப்பட்ட பாலிசி வசதிகள்
- ☆ குறைந்த பிரீமிய விகிதங்கள்
- ☆ துரிதமாக கிளெயிம்களைத் தீர்த்தல்

இத்துறையில் நீடித்து நடக்கும் ஸ்தாபனம். எனவே இக்கம்பெனியில் வேலை செய்வதும் பாலிசி எடுப்பதும் மகிழ்ச்சியைத் தரக்கூடியது.

விவரங்களுக்கு பிராஞ்சு மானேஜருக்கு எழுதுங்கள் அல்லது நேரில் காணுங்கள்

கோயமுத்தூர்
தபால் பெட்டி நெ: 4.

C. சுப்பிரமணியம் B.A.,
பிராஞ்சு மானேஜர்.

THE

PANKAJA MILLS LTD.

(INCORPORATED)

Registered Office : **COIMBATORE**

POST BOX No. 150

•

Spinning

10s to 80s Counts Ring Yarn

and

Double Yarn of Three Counts

•

Managing Agents & Secretaries :

C. S. Ratnasabapathy Mudaliar & Sons

THE
MAHALAKSHMI TEXTILE MILLS LTD.

Telegrams :
"MAHALAXMI, MATHURAI"

Telephones : { Office 74
Residence 78

Authorised Capital	...	Rs. 12,00,000
Issued Capital	...	Rs. 12,00,000
Subscribed Capital	...	Rs. 6,98,200
Paid-Up Capital	...	Rs. 5,98,400

Total No. of Spindles 22,212

Counts 10s to 40s.

Managing Agents :

S. S. N. LAKSHMANAN CHETTIAR & CO.

★

Registered Office and Mills at :

PASUMALAI P. O. (MATHURAI)

THE

Jawahar Mills Ltd.

SALEM JUNCTION

(SOUTH INDIA)

●

SPINDLAGE

Total Ring Spindles - - - 25,672

Fitted with the latest

CASABLANCAS HIGH DRAFT SYSTEM

Spindles shortly expected - - 4,580

COTTON YARN: Spinning from 12s to 80s

- REPUTED FOR ITS -
FINENESS AND EVENNESS

INDIAN PRODUCTS WITH INDIAN CAPITAL AND LABOUR

●

MANAGING AGENTS:

UMAIYAMBIKA & CO.

SALEM JUNCTION

Telegrams: "UMAYAL" Telephone: 56-A

Umayal Weaving Establishment Ltd.

CANNANORE :: N. MALABAR.

"UMAYAL FABRICS"

★

Manufacturers of:

Best "Umayal" Handloom Fabrics, Bedspreads, Table Linen, Furnishing Fabrics and Curtain Cloths, Dress Materials for Ladies and Gents, Fine Egyptian and Silk Shirtings and Suitings in up-to-date Designs and Charming Colours, Turkish Bath Towels, Bath Mats, Bath Gloves, Mufflers, Dhoties and Sarees Etc.

Encourage Handloom Industry

"UMAYAL FABRICS" AN ASSET TO EVERY HOME

★

Everything made to Order

Enquiries Earnestly Solicited.
Popular Fabrics throughout India,
United Kingdom and U. S. A.

BLACKWOODS INDIA LIMITED

2, MANGOE LANE
POST BOX 120
CALCUTTA

Temporary Telephone : CITY 2843 & 2844.

Telegrams : "BLACKWOODS" CALCUTTA

Divisional Offices at :

BOMBAY — Podar Chambers, Parsi Bazaar St., FORT, Tele : 23233

MADRAS — 2/29, Mount Road, Tele : 86852

NEW DELHI — Connaught Place, Tele : 7496

LUCKNOW — 46, Hazratgunj, Tele : 280.

Managing Agents to :

Messrs. W. NEWMAN & CO., LTD., CALCUTTA
Stationers, Booksellers, Printers & Die Stampers

and

Messrs. C. COMENS AND SONS, LTD.
Structurals - Light Railway Materials - Reconditioning of Heavy Diesel Steam and Petrol Engines Compressor Tractors, Dumpers, Road Rollers, Concrete Mixers, etc.

Agents for:

* "UNDERWOOD" Typewriters
* "BILOGRAPH" Duplicators
* "MONROE" Calculators
* "SAFEGUARD" "Check Writers"
* "INTERNATIONAL" Time-Recorders
* "MARSH" Stencil Machines
* "BEATTY" Economy Washers
* "ART METAL" Steel Filing Units, Cabinets, Tables, etc.
* "TANSAD" Steel Chairs
* "INTER OFFICE" Communication Sets
* "LAMSON PARAGON" Ledgers, Fan-fold Forms, etc
* "SUMLOCK" Adding-Calculating and "PLUS" Adding Machines.

Manufacturers of :

First-class Teakwood and Steel Furniture both for Office and Home.

For almost a century established Shippers, to all Ports of the World, of Jute, Gunnies and Indian Products of every kind.

39

ஆண்டுகளாக
நூற்கும் நுண்கலையில் வல்லவர்கள்

கனவு நனவாக முடியுமா? முடியும். ஆனல் அபூர்வமாக....
இதோ ஒரு உதாரணம்.

39 ஆண்டுகளுக்கு முன்பு காலம் சென்ற ஸ்ரீ ஜி. குப்புசாமி நாயுடு எங்கள் ஜின்னிங் பாக்டரியை ஆரம்பித்த காலம். அந்த பாக்டரி சிறந்த மில்லாக உருவாகவேண்டும் என்ற லட்சியக் கனவு கண்டார், அவர். இன்று அது நனவாகிவிட்டது. நடுத்தர, சன்ன, மெல்லிய, மிருதுவான, உயர்ரக நூல்களை உன்னத முறையில் நூற்று சகாய விலைக்கு சப்ளை செய்ய, 60912 ஸ்பிண்டில்களுடைய ஸ்தாபனமாக உருவாகியுள்ளது எங்கள் மில்.

உடை வேண்டி நிற்கும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு அழகிய துணிகள் நெய்து கொடுக்கும் நெசவாலையாக எங்கள் ஸ்தாபனம் விரைவில் வளர்ச்சிபெறும் என நம்புகிறோம்.

லக்ஷ்மி மில்ஸ்

கோ., லிமிடெட்.

பாப்பநாயக்கன் பாளையம் .... கோயமுத்தூர்.

ஏஜண்டுகள் :

ஜி. குப்புஸ்வாமி நாயுடு அன் கோ., அவனுசி ரோடு, கோயமுத்தூர்.

இனிய தமிழ் பாடி இசை வளர்ப்போம்!

தமிழ் இசைக் கல்லூரி, சென்னை

(Recognised by the Director of Public Instruction, Madras)

[தோற்றம்: 1943]

சென்னைத் தமிழ் இசைச் சங்க ஆதரவில் நடைபெறுவது

கல்லூரி ஆலோசனைக் கழகம்:

இராவ்பகதூர் டி. எம். சின்னையா பிள்ளை, எம்.ஏ., பி.எல்., (தலைவர்)
திவான்பகதூர் டி. எம். நாராயணசாமி பிள்ளை, எம்.ஏ., பி.எல்.,
கும்பகோணம் இராஜமாணிக்கம் பிள்ளை
திருப்பாம்பரம் டி. என். சாமிநாத பிள்ளை
இசை அரசு எம். எம். தண்டபாணி தேசிகர்
பண்டித லெ. ப. கரு. இராமனுதன் செட்டியார்
இசை மன்னர் சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை
பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி ஐயர், பி.ஏ., பி.எல்.,
தஞ்சை க. பொ. கிருஷ்ணமூர்த்தி பிள்ளை
இராவ்பகதூர் டி. எஸ். கச்சாபிகேச முதலியார், பி.ஏ.,
திரு. மு. அ. சிதம்பரம்

} உரிமையினால் இடம் பெறுவோர் (Ex-Officio)

கல்லூரி ஆசிரியர்கள்:

தஞ்சை க. பொ. கிருஷ்ணமூர்த்தி பிள்ளை
சித்தூர் வி. இராமச்சந்திரன்

சங்கக் காரியாலயத்தில் "இசைச்செல்வம்" "இசைமணி" வகுப்புக்களும், ஆரம்ப வகுப்பும், அரசியல் தேர்வு வகுப்புக்களும் (Government Technical, Higher and Lower Grade) ஞாயிறு நீங்கலாக மற்ற நாட்களில் தினம் மாலை 4-30 முதல் 7-30 மணி வரை நடைபெறுகின்றன. இசை ஞானமுள்ள மாணவ மாணவிகள் இவ் வகுப்புக்களில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். வெளியூர் மாணவர்கள் தங்கள் உணவு உறைவிட வசதிகளை அவரவர்களே ஏற்பாடு செய்து கொள்ளவேண்டும். மற்ற விவரங்கள் கௌரவ காரியதரிசிகளிடம் தெரிந்து கொள்ளலாம்.

இசைபயில ஏற்ற இடம்!

உங்கள் குழந்தைகளை இங்கு அனுப்புங்கள்!

ஸ்ரீ

தந்தி "பயனீர்" கோயமுத்தூர் டெலிபோன் 160

கோயமுத்தூர்

பயனீர் மில்ஸ்

லிமிடெட்.

(பீளமேடு, கோயமுத்தூர்)





ரிஜிஸ்தரான ஆபீஸ்: பீளமேடு, கோயமுத்தூர் ஜில்லா

உயர்ந்த 40 நெ. முதல் 100 நெ. வரை நூல் தயார் செய்கிறோம்.

மேல்கொண்டு விபரங்களுக்கு மானேஜிங் எஜண்டுகளுக்கு எழுதவும்.

•

மானேஜிங் ஏஜண்ட்ஸ்:

T. R. நாராயணசாமி நாயுடு அண்டு கம்பெனி

தமிழ் இசை ஏழாவது விழா
1949 - 50

வரவேற்புக் கழகம்

திரு. எஸ். இராமசாமி நாயுடு (தலைவர்)

திரு. எம். கே. தியாகராஜ பாகவதர்

திரு. எம். எம். தண்டபாணி தேசிகர்

திரு. சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை

திரு. டி என். சுவாமிநாத பிள்ளை

திரு. கும்பகோணம் இராஜமாணிக்கம் பிள்ளை

திரு. லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்

திரு. என். கோபால ஐயர்

திரு. இராவ்சாகிப் கே. கோதண்டபாணி பிள்ளை

திரு. சா. கணேசன்

திரு. டி. ஆர். அருணாசலம்

திரு. தி. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை

திரு. தி. பொ. மாணிக்கவாசகம் பிள்ளை

திரு. எம். எஸ். சாஸ்திரி

திரு. எம். எஸ். இராமசாமி செட்டியார்

திரு. ஆர். எம். இராமநாதன் செட்டியார்

திரு. டி. சதாசிவம்

திரு. டாக்டர் பா. நடராஜன்

TL
NR,d:211'N49
N49



உள்ளே :

	பக்கம்
காணிக்கை டி. எஸ். கச்சாபிகேச முதலியார்	15
எனக்கருள் செய்வாயம்மா ! கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை	18
லயத்தின் பெருமையும் திருப்புகழும் கித்தூர் சுப்பிரமணிய பிள்ளை	19
இசை அணிகள் பி. சாம்பமூர்த்தி ஐயர்	23
பரத சாத்திரத்தின் வரலாறும் அதன் உட்பிரிவுகளும் க. பொ. கிருஷ்ணமூர்த்தி பிள்ளை	27
இசை அரங்கு நிகழ்ச்சி முறை	41— 63

பதிப்பாசிரியர் :

அன்பு கணபதி

YET ANOTHER STRIDE !

Texmaco have now started the manufacture of

Roller Bearing Spindles

and

Ball Bearing Jockey Pulleys.

We also manufacture complete Ring - frames incorporating the best of modern development to be found in any imported Ring - frame.

Renovation

OF ANY OBSOLETE TYPE RING-FRAME

a Speciality

Renovation includes conversion from :

1. Three to four Roller High Draft of any make and year of manufacture.
2. Band to Tape Drive with Plain or Roller-bearing Spindles and Ball - bearing Jackey Pulleys, if required.
3. Stationery to Rising and Falling Metallic Lappets.
4. Plain Bearing to Ball-bearing for Tin Rollers.
5. Lift increased to any desired length.

TEXMACO

TEXTILE MACHINERY CORPORATION LTD.

Belghurriah

West Bengal.



காணிக்கை

நம் தமிழ் இசைச் சங்கம் சென்ற ஏழு ஆண்டுகளாகத் தமிழிசை வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்து செய்து வரும் அரும் தொண்டினைத் தமிழ்நாடு நன்கு அறியும். தமிழிசை இயக்கமும் அதன் பயனாகிய நம் தமிழ் இசைச் சங்கமும் தோன்றியிரா விட்டால், இசை உலகின் சரித்திரமே வேறுவிதமாக மாறியிருக்கும். தமிழிசை இயக்கத்தைத் தோற்றுவித்து, தமிழிசை என்றென்றும் தழைத்து வளம்பெற நிலையான ஒரு சங்கத்தை நிறுவி, தமிழ் இசைச் சங்கத்தின் மூலகாரணராகவும் முதல் தலைவராகவும் இருந்து பெருந் தொண்டு ஆற்றிவந்த நம் அரும்பெறல் தலைவர் அரசர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களைச் சென்ற ஆண்டில் நாம் இழந்தோம். அரசர் அவர்களின் கலைத் தொண்டினை இன்னும் சிலகாலம் பெற்று மகிழ நாம் கொடுத்துவைக்க வில்லை. தமிழ்நாட்டின் தவக்குறை!

நம் சங்கம்

ஆயினும், அண்ணாமலை அரசர் அவர்கள் வகுத்த வழியைப் பின்பற்றி அறிஞர் டாக்டர் ரா. க. சண்முகம் செட்டியார் அவர்களின் அரிய தலைமையின்கீழ் நின்று, தமிழ் இசைச் சங்கம் தனது பணிகளை விடாது தொடர்ந்து செய்து வருகிறது. ஆண்டு தோறும் இசை விழாக்கள், இசை அரங்குகள் நடைபெறுகின்றன. தமிழ் இசைச் சங்கத்தின் சார்பில் ஒழுங்கான முறையில் திறமிக்க ஆசிரியர்களைக் கொண்டு நடைபெற்றுவரும் தமிழிசைக் கல்லூரி ஆண்டுதோறும் பல 'இசை மணி'களையும் 'இசைச் செல்வங்'களையும் நாட்டுக்கு வழங்கி வருகிறது. அவ்வப்போது இசை யாராய்ச்சிகள், இசைப் போட்டிகள், இசைப் புலவர்களின் விழாக்கள் முதலியவற்றை நம் சங்கம் இனியமுறையில் நடத்தி வருகிறது.

சென்ற இசைவிழா

சென்ற டிசம்பரில் தமிழிசை ஆறு வது விழா, காலஞ்சென்ற திரு சி. என். முத்துரங்க முதலியார் அவர்களின் வர வேற்புத் தலைமையில் செம்மையுற நடந் தேறியது. அந்நாள் மூதலமைச்சர் திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அவர் கள் தமிழிசை பற்றி அரியதோர் ஆராய்ச்சி விரிவுரை நிகழ்த்தி, இசை விழாவினைத் தொடங்கிவைத்து வாழ்த் தினர்கள். சென்ற ஆண்டில் மூதன் முதலாகக் கோபாலகிருஷ்ண பாரதி யார் பாடல் போட்டி ஒன்றினை நம் சங்கம் நடத்தியது. போட்டியில் வெற்றி பெற்றவருக்குக் கவர்னர் ஜனரல் கனம் சி. இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் வழங்கிய தம்புரா ஒன்று பரிசாக அளிக் கப்பட்டது. இந்த ஆண்டிலும் 18-12-49 அன்று மேற்படிப் போட்டி நடைபெற இருக்கிறது.

கவிஞர் நாள்

தமிழிசைப் பாடல்கள் இயற்றிய கவி ஞர் பலரின் விழாக்களைக் கொண்டாட வேண்டும் என்ற முறையில் 7-8-49 அன்று நம் சங்கம் அருணாசலக் கவி அவர்களின் நாளை விழாவாகக் கொண் டாடியது. இராஜாஜி மண்டபத்தில் அமைச்சர் கனம் எம். பக்தவத்சலம் அவர்கள் தலைமையில் நிகழ்ந்த இவ் விழாவில் பல அறிஞர்கள் அருணாசலக் கவி போன்ற கவிஞர்களின் நாளைக் கொண்டாடுவதன் நோக்கத்தைவிளக்கி அழகுறப் பேசினர்.

பண் ஆராய்ச்சி

இந்த ஆண்டில் ஒரு புதிய முயற்சி யினை—ஆக்க வேலையினைச் சங்கம் மேற் கொண்டிருக்கிறது. தக்க அறிஞர் களைக் கொண்டு பழந்தமிழ்ப் பண்களை ஆராய்ந்து வெளிப்படுத்துவதன் மூலம் தமிழிசைக்கு மேலும் ஆக்கம்தர நம் சங்கம் முனைந்துள்ளது. டிசம்பர் 24 முதல் 28 வரையுள்ள ஐந்து நாட்களி லும் காலை நேரங்களில் சென்னை மெமோரியல் மண்டபத்தில் ஆராய்ச் சிக் கூட்டங்கள் நடைபெறும். தேவா ரத்தில் காணப்படும் பண்கள் இங்கு விரிவாக ஆராயப்படும். சிறந்த இசை வாணர்கள் பலர் இவ்வாராய்ச்சியில் கலந்து கொள்வர். இதற்கென ஓர் ஆராய்ச்சிக் குழுவும் அமைக்கப்பட் டுள்ளது. தமிழ் நாட்டிலுள்ள ஆதீனங் களிலிருந்தும், பிறவிடங்களிலிருந்தும் தேவாரப் பாடல்வல்லார் பலர் இதில் வந்து கலந்துகொண்டு இப்பணியில் தங்கள் ஒத்துழைப்பினை நல்குகிறார்கள். அறிஞர் சிலர் ஆராய்ச்சிக் கட்டுரைகள் உதவுகிறார்கள். இதன் பிறகு, சங்கம் குறவஞ்சியின் இசையமைப்புப்பற்றியும் ஆராய்ச்சி நடத்தத் திட்டமிட்டுள்ளது.

கல்லூரி

நம் சங்கம் நடத்தி வரும் தமிழ் இசைக் கல்லூரி நல்லமுறையில் நடந்து வருகிறது. இந்த ஆண்டில் 26 மாணவரும், 27 மாணவியரும் கல்லூரி யில் இசை பயின்று வருகின்றனர். நம் தமிழ் இசைக் கல்லூரி, அரசாங்கத்தின்

ஒப்புதலை இந்த ஆண்டில் பெற்றுள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியையும் தமிழ் மக்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இந்த விழா

23-12-49 வெள்ளியன்று மாலை தமிழ் இசை ஏழாவது விழா தொடங்குகிறது. முன்னாள் மேயர் திரு. சு. இராமசாமி நாயுடு அவர்களின் வரவேற்புத் தலைமையில், சென்னை அரசவைக் கவிஞர் நாமக்கல் வி. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் விழாவைத் தொடங்கிவைக்க அன்புடன் இசைந்துள்ளார்கள். 2-1-50 வரையில் வழக்கம்போல இசை, நடன அரங்குகள் நடைபெறுகின்றன.

காணிக்கை

கேட்டும் கண்டும் மகிழுமாறு அன்பர்களை வேண்டிக்கொண்டு, இம்மலரைத் தில்லைக் கூத்தனின் திருவடிகளில் காணிக்கையாகச் செலுத்துகிறோம்.

வளர்க தமிழிசை!

—டி. எஸ். சச்சிதானந்தன்.

1,00,00,000

of Men and Women heard it clearly.

In 1949 More than a Crore of people heard it clearly through **A.R.A** Speakers in the All India Swadesi Exhibition, Trichy, A.I.S. Exhibition Tiruppur, All India Industrial Exhibition Coimbatore and in the Big Public Meeting in South India.

Top Rank Musicians Appreciated the A.R.A. Speakers

The Loud Speakers installed in the Tamil Isai Music festival by

ASSOCIATED RADIO AGENCIES

26, Chinnakadai St., Teppakulam P. O. TRICHINOPOLY

எனக்கருள் செய்வா யம்மா!

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

இராகம் : குந்தலவராளி. தாளம் : ஆதி.

பல்லவி

இன்னிசைக் கவியமுதம்—இரங்கி நீ
எனக்கருள் செய்வா யம்மா

அநுபல்லவி

அன்னையே அழகியே அகில கலா வல்லியே
உன்னும் அடியவரின் உள்ளத் தொளிர் மணியே (இன்னிசை)

சரணம்

சாத்திரம் கற்றறியேன்
தவமெதும் செய்தறியேன்
தோத்திரம் பாடியுன்னைத்
தொழுதுய்ய வேண்டிநின்றேன்
வாய்த்தசெங் கோல்பிடித்து
மகுடம் புனைந்துலகு
காத்தர சாளும்சிவ
காமிமீ னாட்சியே. (இன்னிசை)

இசை வகுத்தவர் : தஞ்சை சு. பொ. கிருஷ்ணமூர்த்தி பிள்ளை.

பல்லவி

; ச ரி, ம பா த நீ பதா ச்	; த ச் ரி நீ,	நி த த ப மா ;
இன் னிசைக் கவி யமு தம்	இ ரங் கி	நீ
; ச ச ரி ம பா தா ; ; ;	ப த ச ரி ச் நி நீ	நி த த ப மா ;
எனக் கருள் செய்	வா யம்	மா

அநுபல்லவி

; ம நீ த ச் ரி ; ச் நீ த ச் ரி	; ச் ம் ரி ச் ரி	தா ச் நி நி த தா
அன் னை யே அழ கி யே	அ கில க	லா வல் லி யே
; தா ச் ரி ச் தா ச் நி நி த தா	; ம பா த நீ	நி த ச நி த ப மா
உன் னும் அ டி ய வ ரின்	உள் ளத் தொளிர்	ம ணி யே

சரணம்

; ம ரி, பதா நி த ச் நி த ப மா	; ம ச ரி மா ப	தா ச் நி த ப மா
சாத் திரம் கற் ற றி யேன்	த வ மெதும்	செய் தறி யேன்
; ம ரி, ச ச ரி ச நி தா ச ரி ச ரி	; ச மா பா த	நி த ச் நி த ப மா
தோத் திரம் பா டி யுன் னைத்	தொழு துய்ய	வேண் டி நின் றேன்
; ம நீ த ச் ரி ச் நி தா ச் ரி,	; ச் ம் ரி ச் ரி	தா ச நி நி த தா
வாய் த செங்கோல் பிடித் து	ம குட ம் பு	னைந் து ல கு
; த ச் ரி ச் ரி தா ச் நி நீ தா	மா ; பா தா	ச நி நி த த ப மா
கா த் த ர சா ளும் சிவ	கா மி மீ	ன ட் சி யே

லயத்தின் பெருமையும், திருப்புகழும்

சித்தூர் திரு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள்
(இசைப்பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்)

கந்தருவவேதமானது நிருத்தம் கீதம் வாத்தியம் என மூவகையாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. பரதர் நாரதர் தும்புரு முதலிய முனிவர்கள் இவ்விசை முறையினை எல்லையில்லாத பிரஸ்தாரத்தினால் விரிவுபடுத்தியுள்ளார்கள். சௌராஷ்டிர, மாளவ, லாட, காஷ்மீர, உத்கல, கர்நாடக, ஆந்திர, வங்க, திராவிட நாடுகளை ஆண்ட பெரு வேந்தர்களாலும் பெருஞ் செல்வர்களாலும் கந்தருவ வேதமாகிய இசைத்துறை நன்கு பரிபாலிக்கப்பட்டது. ஆயினும் பிறநாட்டு வேந்தர் படையெடுப்பாலும் அவ்வப்பொழுது ஏற்பட்ட உள்நாட்டுக் குழப்பங்களாலும், இசைக் கலையின் உருவம் மாறுபட்டுச் சாஸ்திரம் ஒருபுறமும், உபதேசம் மற்றொருபுறமும், அப்பியாசங்கள் இன்னொருபுறமுமாகக் காந்தர்வ வேதத்தில் பேதங்கள் தோன்றுவனவாயின. வீணைதந்திரம், கலாதந்திரம், இராகதந்திரம், மிஸ்ர தந்திரம், தாளதந்திரம், கீதிகா தந்திரம், லாசிகா தந்திரம், உல்லாசிகா தந்திரம், மேள தந்திரம், ஜாதிக் கிரக லயஸ்தானம், மார்க்காங்க, பிரக்கிரியா, கிரியா, காலக் ஞானம், வாத்திய விசேஷங்களாகிய துரங்க கஜ, சாரங்க சிம்ஹலீலா, விஜ்ரம்பணம் என்பவைகளும் இவற்றின் மேன்மையான நடைகளும் அங்கசமக்கினி முதலிய வகைகளும் அடங்கியதே காந்தர்வ வேதமாகும்.

தந்திரம் என்பது வித்தை. சஷ்டி தந்திரம் என்பது அறுபது கலைப் பிரிவுகளாகப் பகுக்கப்பெற்ற சாங்கிய சாத்திரமாகும். தந்திரம் என்று சொல்லப்படுபவைகளில் சமய சாத்திரங்களும் அடங்கியுள்ளன. காந்தர்வ தந்திரமானது சைவ சாத்தேய யாமள தந்திரங்களிற் புகழ்பெற்று விளங்குவது. நிருத்த, கீத, வாத்தியங்களுக்கு முதலிடந்தந்து விளங்கும் யாமள தந்திரமானது மூப்பத்திரண்டு பிரிவுகளாகச் சொல்லப்படுகின்றது. வீணை தந்திரம் 19 பிரிவுகள் கொண்டதாய் நூறு பிரம சுலோகங்களிற் கூறப்படுகிறது. நாதப் பிரமம், லயப்பிரமம் என்பவை கடவுளின் சொரூபமாகக் கூறப்படுகின்றன. நாதப்பிரமமானது சத்தி சொரூபமென்றும், லயப் பிரமம் சிவ சொரூபமென்றும் கூறப்படும். லயத்திற்குத் தாளமென்றும் பெயர். தகாரம் சிவமாகவும், ளகாரம் சத்தியாகவும், சிவசத்தியின் சேர்க்கையே தாளமாகவும் கூறப்படுகின்றன. மேலும் தகாரம் தாண்டவத்தையும் ளகாரம் லாசியத்தையும் குறித்த நிலையில் இவ்வெழுத்துக்களின் சேர்க்கையே தாளம் என வழங்கப் பெறுவதாயிற்று எனவும் கூறுவர். தாளம் என்பது சேர்க்கைப் பிரிவுகளின் கால நிர்ணயத்தையும் குறித்து நிகழ்வதாகும்.

கால நிர்ணயம்

கீதம், வாத்தியம், நிருத்தம் என்னும் இம்முப்பிரிவுகளாலும் இனிமையாகக் கேட்கப்படும் பத்துவித உயிர்நிலைகளின் (தசப் பிராணங்களின்) உருவாய் அமைந்த இசையோசையின் நுட்பங்களை அறிவதற்கும் காலநிர்ணயமாகின்ற லயமே காரணமாகும்.

லயமானது நாட்டியம், இசை, கருவிகள் இவை மூன்றிற்கும் ஆதாரமென்றும் சொல்லப்படுகின்றது. 'சுருதி மாதா, லயம் பிதா' என்னும் வாக்கியத்தின்படி சுருதியும் லய

மும் இசைக்குத் தாயும் தந்தையுமாகும். சுருதியைச் சிதறவிடாது ஒழுங்கில் நிறுத்துவது லயமாகும்.

லயம் என்பது தாள சப்த உற்பத்திக்குக் காரணமாகிய காலம், மார்க்கம், கிரியை, அங்கம், கிரகம், சாதி, கலை, லயம், எதி, பிரஸ்தாரம் என்னும் தசப்பிராணனும், தத்தித்தொம்நம் என்பனவும் ஆகிய பதினெட்டு சூத்திரங்களுமடங்கிய பிரஸ்தார பேதமாய் அவைகளிலிருந்து அநந்தகோடி தாளங்கள் உண்டாகின்றன. அவைகளில் அங்கப் பிரமாணமாகிய சச்சத்புடம் சாசத்புடம் சட்பிதாபுத்திரிகம் சம்போற்கேட்டம் உற்கட்டிதம் முதலிய அபூர்வ தாளங்களும், அக்ஷரபிரமாணமாகிய துருவ முதலிய ஏழு தாளங்களும், சாதிஐந்தினுற் பெருக்கவரும் 35 தாளங்களும், இத்தாளங்களுக்கு மூலாதாரம் சுவாதிஷ்டானம் மணிபூரகம் அநாகதம் விசுத்தி ஆஞ்ஞை என்னும் ஆறு ஆதாரங்களினின்று விராமம், தருதம், லகு, குரு, புலுதம், காகபாதம் என்ற ஆறு அங்கங்களும் பிரஸ்தாரக் கிரமங்களிலிருந்து விரிவு அடைகின்றன எனக் கூறப்படுகின்றன. ஆதலின் தாளத்திற்குக் காலம் உயிர் போன்றதாகும். எங்கும் நிறைந்துள்ள இறைவனுடைய ஐந்து முகங்களிலிருந்து உண்டாகும் மங்களகரமான உயிர்நிலைச் சொற்களே சர்வ லகுவாகும்; சர்வ லகுவே தாளமாகும். தாளத்திற்குக் காரணமாகிய சிவபெருமானுடைய ஐந்து முகங்களாகிய சத்யோஜாதம், வாமதேவம், அகோரம், தத்புருஷம், ஈசானம் என்னும் முகங்களிலுண்டாகிய லயசம்பந்தமான உயிர்நிலைச் சொற்களாவன :—

1. சத்யோஜாதம் என்னும் முகத்தில் இருந்து உண்டாகிய சொற்கட்டு.

1. டன கின—கினனகி	நாகபந்தம்
2. நந கிட—கிடதகி	பவனம்
3. கிடகிட தத்தா	ஏகம்
4. கிட தத ...	ஏக சரம்
5. நகு நகு ...	துஸ் வரம்
6. கர தகிட ...	சஞ்சாரம்
7. தோம் கி தோம் தி	விக்ஷேபம்

2. வாமதேவம் என்னும் முகத்தில் இருந்து உண்டாகிய சொற்கட்டு.

1. தத கிட கி ...	ஸ்வஸ்தி
2. தோஹம் தா ...	வலிகோஹலம்
3. தோம் கினதோம் கின தோம் கின,	புல்ல விக்ஷேபம்
4. தோம் தோம் கோம் கோம்	குண்டலி விக்ஷேபம்
5. தோம் கிணதத்தா	சஞ்சார வலிதி
6. கிடதோம்தோம் கினகேம்கேம்	கண்டலை பந்தம்
7. டகுதோம்தோம்	பூரகம்

3. அகோரம் என்னும் முகத்தில் இருந்து உண்டாகிய சொற்கட்டு.

1. நககிடகிட தகிதா	அலக்ஷம்
2. தத்தரிகி தத்தரிகி	உத்சாரம்
3. தகிதிகி தகிதிகி	விச்ராம்
4. டகுனகு டகுனகு	விஷமகலி
5. கரிது கரிது	சரீ
6. கிரி கிரீ	ஸ்புரீ
7. நரகித் தரிகி	ஸ்புரணம்

4. தற்புருஷம் என்னும் முகத்தில் இருந்து உண்டாகிய சொற்கட்டு.

1. தரிகிட கிடதகிதா	சுத்தி
2. டடகுடட	ஸ்வரஸ்புரணம்
3. நநகி நகரி கரி	உச்சல்லம்
4. தகேம் தகேம் தகேம்கே -	வலத்ரம்
5. தோர்கிநகி தோர்கிநகி	அவகடம்
6. தத்தா	தகாரம்
7. திதி	மாணிக்யபல்லி

5. ஈசானம் என்னும் முகத்தில் இருந்து உண்டாகிய சொற்கட்டு.

1. தகோம் தகோம் தகோம்-	சமஸ்கிலிதம்
2. கிர்கிட கிர்கிட	விகடம்
3. கணகணகி	சதிருசம்
4. திதிகிடகி	கலீ
5. திகிநகி	உடுகலீ
6. தரகடதரகட	அணுச்சல்லம்
7. தோம்நகட தோம்நகட	குத்தம்

பரமேசுவரனது ஐந்து முகங்களின்றும் தோன்றிய இந்த 35சொற்கட்டுகளும் மிகப் பழமையானவை என்று நூல்கள் கூறுகின்றன. மேலும் ததிங்கிணதொம் என்னும் சொற்கட்டானது பஞ்சாக்ஷரமாகும்.

இவைகள் தவிர சாரங்கதேவரால் சொல்லப்பட்ட கோணகத மென்னும் சொற்கட்டுகளும், நந்திகேசுவரர் முதலிய நான்கு சிவபக்தர்களால் சொல்லப்பட்ட சம்பிராதம் முதலிய சொற்கட்டுகளும் கூறப்படுகின்றன. இவை முதலிய லய சம்பந்தமான உயிர்நிலைச் சொற்கட்டுகளை எல்லாம் இவைகளின் ரகசியங்களை யறிந்த அருணகிரிநாதருடைய திருப்புகழ்ச் சந்தப் பாக்களிலே தெளிவாகக் காணலாம்.

இதுவரை சொன்ன விஷயங்கள் யாவும் சாஸ்திர சம்மதமாகும். ஆகலின் மேற்கண்ட லய சம்பந்தமான தாளப் பிரஸ்தாரங்களை எப்படி அநுபவத்திற்குக் கொண்டு வருவது என்பது ஒரு முக்கியமான அம்சமாகும்.

தாளப் பிரஸ்தாரங்களை அநுபவத்திற்குக் கொண்டுவரும் முறை

அதாவது தாளம் என்பது கால அளவைப் பற்றியதோர் கணிதமாகும். அக்கால அளவானது இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அவை எவ்வாறெனில்,

100 தாமரை இதழை அடுக்கி அதில் ஒரு இதழில் ஊசியைச் செலுத்துவதற்குப்பட்ட காலம் கண மென்று சொல்லப்படும்.

கணம் 8 கொண்டது ஒரு இலவம்.
இலவம் 8 கொண்டது ஒரு காஷ்டை.
காஷ்டை 8 கொண்டது ஒரு நிமிஷம்.

இவை நான்குக்கும் க்ஷண காலம் என்று பெயர். இவை தேவர்களால் அறியக் கூடியவை.

நிமிஷம் 8 கொண்டது அணுதுருதமாகும். அணுதுருத காலத்தைக் கொண்டு காகபதம் வரை மானிடர்களால் அறியக் கூடியவையாகும். இவ்வித கால அளவானது அசைவற்று எங்கும் பரிபூரணமாக நிறைந்த பரப்பிரமத்தின் பரவெளியினின்று உண்டாகும் அசைவு அல்லது சலனமெனச் சொல்லப்படுகின்றது. இவ்வித சலனமே கால அளவிற்குக் காரணமாகும். மேலும் அவ்வித முண்டாகும் அசைவின் காலத்தை ஒருவகையாக நிதானித்து, அதை அதிகநேரம் நிறுத்தவோ அல்லது துரிதப்படுத்தவோ செய்வதுதான் கால நிர்ணயமாகும்.

இக் கால நிர்ணயத்தை ஆறு பிரிவுகளாகப் பிரித்து ஷட்கால மென்றும், அதற்குரிய பெயர்கள், தக்ஷணம், வார்த்திகம், சித்திரம், சித்திரதரம், அர்த்தசித்திரம், அதிசித்திரம் என்றும் பெரியோர்கள் நிச்சயம் செய்திருக்கிறார்கள். அக் கருத்தை அநுசரித்தே, தற்காலம் நாம் இசை சம்பந்தமான கிரியைகளைச் செய்யுங்கால் 1. களைச்சவுக்கம், 2. களைச்சவுக்கம், 4. களைச்சவுக்கம் என்றும், விளம்பம், மத்திமம், துரிதம் என்றும் வழங்குகின்றோம். சுரம் பாடவும், பல்லவி அனுலோமம் பிரதிலோமம் செய்யவும் வசதி அளிக்கக்கூடியது இக் கால நிர்ணயமேயாகும்.

அசைவற மனத்தை நிறுத்திலென்றி அடிக்கடி சலிக்கின்ற மனத்திற்கு இக் காலநிர்ணயம் கைகூடுவது மிகவும் அருமையென்றே புலப்படுகிறது. அன்றியும் மனத்தை அசைவற நிறுத்தி நிதானிப்பதற்கு உண்மை விருப்பமும் உறுதியும் "முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்" எனப் பெரியோர் கூறியபடி விடாமுயற்சியும் இருக்கவேண்டியது அவசியமாகும். அவ்விதம் இல்லாமையால் பலர் சாதாரணமாகத் தாள விஷயங்களை யறிந்திருந்தும், இராகம் முதலானவற்றை நன்முகப் பாடும்படியான சக்தியைப் பெற்றிருந்தும், காலநிர்ணயத்துடன் அனுபவத்திற்குக் கொண்டுவர இயலாமல் மயங்கி நிற்கிறார்கள். மேலும் சுருதியாகிற சுரபேதங்களை அறிந்திருந்த போதிலும் தாள நுட்பங்களை அறிந்து கொள்ளாதவரை அங்கே ஆனந்தம் உண்டாவவதற்குச் சிறிதும் இடமில்லை. ஆகலின் ஒவ்வொருவரும் தாள நுட்பங்களை அறிந்து அனுபவிக்க வேண்டியது மிக அவசியமாகும். அன்றியும் இவ்வுலகத்தின்கண், உயிரில்லாமல், உடலால் எக்காரணத்தாலும் எச்செய

லும் செய்ய இயலாததுபோலக் கால நிர்ணய மில்லாமல் தாளத்தால் எச்செயலும் செய்ய இயலாது என்பதைப் புதிதாக இசை பயில்வார் அனைவரும் அவசியம் அறிய வேண்டும்.

இன்னும் மேற் சொல்லிய லய சம்பந்தமான பற்பல கணிதங்களைப்பற்றி ஒவ்வொன்றாக விளக்கினால் விரியுமேயன்றி முடிவு காண்பது அரிதேயாகும். இதனை,

"தென்றல் வடிவுஞ் சிவனார் திருவடிவும்
மன்றல் வடிவும் மதன்வடிவுங்—குன்றாத
வேயின் இசைவடிவும் வேதவடி வுங்காணில்
ஆயதா ளங்காண லாம்."

என்று ஆன்றோர் கூறியதாலும் அறியலாம்.

அருணகிரிநாதர் அறிவுறுத்திய தாள நுட்பங்கள்

லய சம்பந்தமான தாள நுட்பங்கள் யாவும் ஞான குருவாகிய முருகக் கடவுளின் திருவருள் பெற்ற அருணகிரி நாதர் திருவாய் மலர்ந்தருளிய திருப்புகழில் நன்கு விளங்குகின்றன. அது எவ்வாறெனின் இசைப் புலவர்கள் எல்லோரும் தாளத்திற்கு இசைப் பாட்டு அமைத்தார்கள். அருணகிரியார் திருப்புகழ் எல்லாம் தாள நுட்பங்களாகிய லயப் பிரஸ்தாரத்தினால் பதினாயிரம் திருப்புகழ்ப் டாமாலே பாடி இருப்பதாக நூல்களிலிருந்து தெரிகின்றது.

திருப்புகழ்ப் பாட்டு ஒவ்வொன்றும் ஒவ்வொரு தாளமாகும். 35 தாளங்கள், 108 தாளங்கள், அபூர்வ தாளங்கள், பிரஸ்தாரக் கிரமங்களினால் ஏற்படும் அங்க தாளங்கள், மாத்திரா பிரஸ்தாரங்களினால் ஏற்படும் தாளங்கள் இவைகளிலும், இன்னும் கதி பேதம் நடைபேதங்களிலும் அநேகம் திருப்புகழ்ப் பாக்கள் இருக்கின்றன. அவைகள் யாவும் சொன்னால் மிக விரியும் ஆதலால் சில திருப்புகழை மட்டும் இங்கே குறிப்பிடுகின்றேன்.

1. "தண்டே னுண்டே வண்டார் வஞ்சேர்
தண்டார் மஞ்சுக் குழல் மானார்"

என்னும் திருப்புகழ், பிரத்தியாங்கம் ( ) என்னும் அங்க தாளத்தில் அமைந்திருக்கிறது.

2. "அல்லி விழியாலும் முல்லை நகையாலும்
அல்லல் பட ஆசைக் கடலீயும்"

என்னும் திருப்புகழ், திரிதீய தாளம் ( ) என்னும் அங்க தாளத்தில் அமைந்திருக்கிறது.

3. "கொலை மதகரியன பிருகமத தனகிரி
கும்பத் தன மானார்"

என்னும் திருப்புகழ், சரஸ்வதி கண்டாபரணம் ( ) என்னும் அங்க தாளத்தில் அமைந்திருக்கிறது. இவ்வாறே ஒவ்வொரு திருப்புகழும் ஒவ்வொரு தாளத்தின் அங்க ரூபத்தை விளக்குகின்றது என்பதற்கு மேலே குறிப்பிட்டிருக்கும் திருப்புகழ்ப் பகுதிகளே தகுந்த சான்றாகும்.

இன்னும் அருணகிரிநாத சுவாமிகள் அருளிச் செய்த சந்தப் பாக்கள்—திருவகுப்பு, கந்தரந்தாதி, கந்தரலங்காரம், கந்தரனுபூதி என்பவைகளாம். இச் சந்தப் பாக்களில், கந்தரந்தாதி, அருணகிரியார் வில்லிபுத்தூராருடன் தர்க்கம் செய்த காலத்தில் பாடப் பட்டதென்றும், அதற்கு உரை அவ் வில்லிபுத்தூராரே செய்தனரென்றும், அதில் சிவனுடைய ஐந்து முகங்களிலிருந்து உண்டாகிய பஞ்சாக்ஷரமென்னும் உயிர்நிலைச்சொற்களில் இரண்டாவது சொல்லினால், திதத் தத், என்று தொடங்கும் 54 ஆவது பாடலுக்கு அவர் உரை செய்ய மாட்டாமல் திகைத்துத் தோல்வியுற்றனர் என்றும் சொல்லுவார்கள். தோல்வியுற்றதற்குக் காரணம் அப் பாட்டானது லய சம்பந்தமான சொற்கட்டுகளையுடையதாய் இருந்தமையால் அதற்கு உரை செய்யமுடியாமையே என்பது புலனாகின்றது.

லய சம்பந்தமான தாள நுட்பங்களை அறிய விரும்பும் இசை அறிஞர்கள் திருப்புகழ்ப் பாராயணம் செய்து முருகப் பெருமானின் திருவடிகளை எப்போதும் தியானித்தால் அவர்கள் மனத்தில் பற்பல அரிய கருத்துக்கள் எளிதில் புலப்படும்.

இசை அணிகள்

திரு. P. சாம்பமூர்த்தி ஐயர் அவர்கள், B.A., B.L.
(இசைப்பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகம்.)

காவியங்களில் அணிகள் காணப்படுவது போல், இசைப் பாட்டுக்களிலும் அணிகள் காணப்படுகின்றன. கவிகள் தங்களுடைய கருத்துக்களை அழகு மேம்படக் கூறி யிருப்பது போல், இசைப் புலவர்களும் தங்களுடைய கருத்துக்களை இசையின் வாயிலாக அலங்காரப் படுத்திக் கூறியுள்ளார்கள். இராகத்தின் சொரூபத்தை விளக்க வேண்டுமென்னும் நோக்கத்துடன் இயற்றப்பட்ட உருப்படிகளில் இசை யணிகளை நிரம்பக் காணலாம். இசை அணிகளிற் சில, பாடகர்களினாலும், சில வாத்தியக்காரர்களினாலும் ஏற்பட்டன. ஓர் உருப்படியில் தோன்றும் எல்லா ஸ்வரங்களையும் வரிக பாவத்துடன் பாடுதல், அல்லது வாசித்தல் என்னும் முறை வைணீகர்களினால் ஏற்பட்டது. முதிர்ந்த ஞானத்தையுடைய இசை வல்லுநர்களின் பாட்டிலும், வாசிப்பிலும் இசை மெருகுடன் விளங்குவதைக் காணலாம். சில வைணீகர்களின் வாசிப்பில், மீட்டு ஜாதிகள் ஓங்கி நிற்கும். மற்றுஞ் சில வைணீகர்களின் வாசிப்பில் இடது கை வேலை மிக்க மநோகரமாக இருக்கும்.

பிடிலில், ஜாரு வாத்தியம், பிடி வாத்தியம் என இரு விதமான வாசிப்பு முறைகள் உள்ளன. இதில் ஒவ்வொரு வாசிப்பிலும் ஒரு தனிச் சுவை இருக்கின்றது. பிடி வாத்தியக் காரரிடத்தில் அனுஸ்வரங்கள் மிகுதியாக உபயோகப்படுவதைக் காணலாம். இந்த வாசிப்பில், ஸ்வரங்கள் முத்துக்களைக் கொண்டு அலங்கரிக்கப்பட்டது போல் காணப்படும். ஜாரு வாத்தியத்தில் கம்பித கமகத்தின் உயர்வைத் தெளிவாக உணரலாம். பிடில்வாத்தியத்தில் தானம் வாசிப்பதிலும் இரு சம்பிரதாயங்கள் உள்ளன. அவற்றுள் தானவில் அல்லது குதிப்புவில் போட்டுத் தானம் வாசித்தால்தான் கேட்பதற்கு மிக்க ருசிகரமாக இருக்கும். ராக பாவமும் பூரணமாக விளங்கும். ஸ்வர வில்லைக் கொண்டும் சிலர் அழகாகத் தானம் வாசிக்கிறார்கள். பூர்வ டால், உத்தர டால் போன்ற கமகங்களைத் தந்தி வாத்தியங்களில் நன்றாக வாசிக்கலாம்.

பாட்டுக்களில் காணப்படும் அணி வகைகள்

உருப்படிகளில் காணும் இசை யணிகளைப் பற்றி இப்பொழுது கவனிப்போம்:

இசைப் பாட்டுக்களில் தோன்றும் அணிகளை, 1-தாது அல்லது இசை சம்பந்தமானவை; 2-மாது அல்லது சாகித்திய சம்பந்தமானவை என இரு வகையாகப் பிரிக்கலாம். இன்னும் பாட்டுக்களின் இசையமைப்புக்களைப் பொதுவாக நோக்குமிடத்து, அவைகளை:—

1. சாமானிய நடையிலுள்ளவை:—

(உதாரணம்) அருமருந்தொரு - மோகனம் - முத்துத்தாண்டவர். ரகுவம்ச ஸுதாம்புதி - கதனகுதூகலம் - பட்டணம் சுப்பிரமணிய ஐயர்.

2. தான நடையிலமைந்துள்ளவை:—

(உ-ம்) கொலுவை யுன்னாடே - பைரவி - தியாகராச சுவாமிகள். தான வர்ணங்கள்.

3. சர்வ ஸ்வர கமக வரிக பாவத் துடன் அமைந்துள்ளவை :—

(உ-ம்) பாரெங்கும் பார்த்தாலும்-கல்யாணி. வேலவரே உம் மைத்தேடி - பைரவி } கனம் கிருஷ்ணையர்

4. லய வேலைப்பாட்டுடன் அமைந்துள்ளவை :—

(உ-ம்) மீனலோசன ப்ரோவ - தன்யாசி. நின்னு விநாக மரி - பூர்வ கல்யாணி } சியாமா சாஸ்திரிகள்

எனப் பிரிக்கலாம். இந் நான்கு பிரிவுகளும் தாதுவைப் பற்றியவை யாகும்.

பாட்டுக்களை மீண்டும்.

1. கமகங்கள் இயல்பாகவும், மித மாகவும் அமைந்துள்ளவை :—

(உ-ம்) காலைத் தூக்கினின்றாடும் தெய்வமே - யதுகுல காம்போதி - மாரிமுத்தாப் பிள்ளை.

2. கமகங்கள் விசேஷமாக அமைந்துள்ளவை:—

(உ-ம்) திருவடி சரணம் - காம்போதி - கோபால கிருஷ்ணபாரதி.

சேதஸ்ரீ - த்விஜாவந்தி - முத்து சுவாமி தீக்ஷிதர்.

என்றும் பிரிக்கலாம்.

தாது சம்பந்தமான அணிகள்

1. சிட்டை ஸ்வரம் :— சிட்டை ஸ்வரம் என்பது இசைப்புலவர்களால் ராகபாவம் ததும்பும் படியாகவும், உருப்படியின் நடையை அனுசரித்தும் இயற்றப்பட்ட ஸ்வர சஞ்சாரியாகும். அவ்வப்பொழுது கல்பனையாகப் பாடப்படும் சுரத் தொடர்ச்சிகளுக்கு மனோதர்ம ஸ்வரம் என்று பெயர்.

சிட்டை ஸ்வரங்களைக் கிருதிகளில் காணலாம். அனுபல்லவிக்குப் பின்னும் சரணத்திற்குப் பின்னும் பாடப்படும் இந்த ஸ்வர சஞ்சாரியானது கிருதியின் சமகாலத்திலும் (உ-ம். பாஹிமாம்ஸ்ரீ - ஜனரஞ்சனி - மகாவைத்தியநாதையர்), அதன் மத்திம காலத்திலும் (உ-ம். நீமதி சல்லக - ஆனந்த பைரவி - கவி மாத்ரு பூதையர்) அமைந்திருக்கலாம்.

மகுடத்துடன் முடிக்கப்படும் சிட்டை ஸ்வரங்கள் கேட்பதற்கு மிக்க அழகாக இருக்கும். (உ-ம்.) ப்ரோசேவாரெவருரா - கமாஸ் - மைசூர் வாசுதேவாச்சாரியார்.

சில சிட்டை ஸ்வரங்களின் ஆவர்த்தனங்களின் ஆரம்பத்தில் ஒரே ஸ்வரத் தொகுதி அலங்காரமாக வந்து கொண்டிருக்கும். (உ-ம்.) இந்த பராகேலனம்ம - பேகட - வீணைக் குப்பையர்.

சில சிட்டை ஸ்வரங்கள் பண்டைக் காலத்து அலங்காரங்களுடனும் நடை அழகுடனும் விளங்குகின்றன. (உ-ம்.) சிருங்கார லகரி - நீலாம்பரி - லிங்கராஜ அர்ஸ், ரகுவம்ச சுதாம்புதி - கதனகுதூகலம் - பட்டணம் சுப்பிரமணிய ஐயர்.

அனுலோம - விலோமக் கிரமமாக அமைந்துள்ள சிட்டை ஸ்வரங்களும் உள்ளன. (உ-ம்) கமலாம்பாம் பஜரே - கல்யாணி - முத்துசுவாமி தீக்ஷிதர்.

வர்ணங்களில் காணப்படும் முக்தாயி ஸ்வரங்களும், எத்துக்கடை ஸ்வரங்களும் ஒரு வகை சிட்டை ஸ்வரங்கள்; ஆதலின் அவைகளில் காணப்படும் அணிகளில் சிலவற்றைக் கவனிப்போம் :—

சுரோதோவக மகுடத்துடன் முடியும் முக்தாயிஸ்வரத்தைச் சுவாதித் திருநாள் இயற்றிய சலமேல - சங்கராபரண ராக - வர்ணத்தில் பார்க்கலாம். ராக பாவத்திற்கு ஒவ்வாத சஞ்சாரங்களைச் சாமர்த்தியமாக ராக பாவம் பிறழாமல் மத்யமகால நடையில் சேர்த்திருப்பதையும் இந்த வர்ணத்தில் காணலாம். (உ-ம்.) தா, மாரி - கடைகி எத்துக்கடை ஸ்வரம். இந்த வர்ணத்திலேயே மூன்றாவது எத்துக்கடை ஸ்வரத்தில் ஸ்திப என்று மந்தர ஸ்தாயியில் வரக்கூடாத ஒரு பிரயோகத்தைப் பஞ்சம நியாசத்தில் நம்முடைய கவனத்தை இழுத்து, மத்திம காலத்தில் இசைப்புலவர் அழகாகச் சேர்த்திருக்கிறார்.

கமலாக்ஷி - காம்போதி. குன்றக்குடி கிருஷ்ணபர் இயற்றிய இந்த வர்ணத்தில் ஒரே

ஸ்வரத் தொகுதி (தாநிபத என்பது) மீண்டும் மீண்டும் அழகாக 3-வது எத்துக்கடை ஸ்வரத்தில் வருவதைக் கவனிக்கலாம்.

நடை கீதங்களும் முக கீதங்களும் ஸ்வர சஞ்சாரிகளாகும். அவைகளிலும் பலவகை அணிகள் காணப்படுகின்றன (உ - ம்) கேதாரம் - நடை கீதம்; பைரவி - முககீதம்.

சிட்டை ஸ்வரங்கள், ராகங்களின் சரித்திர ஆராய்ச்சிக்கு மிகப் பயன்படுகின்றன. எந்தெந்தக் காலத்தில் எந்தெந்தப் பிரயோகங்கள் ஒரு ராகத்தில் வழக்கத்திலிருந்தன என்றும், அவை எப்பொழுது வழக்கத்திலிருந்து வழுவிப் போயின என்றும் நிர்ணயப்படுத்துவதற்கு அவை உதவுகின்றன. (உ - ம்) அம்பா நீ சரணமு என்ற கிருதியின் சிட்டை ஸ்வரம் ஆனந்த பைரவி (ராமசாமி தீக்ஷிதர்). இதில் பநிஸ்ா பிரயோகம் காணப்படுகிறது. ஆனால் இந்தப் பிரயோகத்தை இப்பொழுது ஆனந்த பைரவியில் உபயோகப்படுத்துகிறதில்லை.

சிட்டை ஸ்வரமானது பல்லவியின் ஆரம்ப ஸ்வரம் இன்னதென்று தீர்மானிப்பதற்கும் உபயோகப்படுகிறது. (உ - ம்) ஏமனிநே - முகாரி - சுப்பராய சாஸ்திரி. சிட்டை ஸ்வரங்கள் விருவிருப்பான நடையில் அமைந்திருந்தால்தான் கேட்பதற்குப் பகட்டாக இருக்கும்.

2. **ஸ்வர சாகித்தியம்** :—சிட்டை ஸ்வரத்திற்கு ஒரு சாகித்தியம் அமைக்கப்பட்டிருக்குமாயின், அதற்கு ஸ்வர சாகித்திய அணி என்று பெயர். இந்த அணியுள்ள கிருதிகளில் ஸ்வரபாகத்தை அனுபல்லவிக்குப் பின்னும் அதன் சாகித்தியத்தைச் சரணத்திற்குப் பின்னும் பாடுவது முறையாகும்.

(உ - ம்) நினுஸேவிஞ்சின - யதுகுல காம்போதி - சுப்பராய சாஸ்திரி.

ஸ்ரீ பார்த்தசாரதே - பைரவி - மைசூர் சதாசிவராயர்.

3. **சொற்கட்டு ஸ்வரம்** :— சிட்டை ஸ்வரத்தின் இடை இடையே ஜதிகள் அதாவது சொற்கட்டுகள், அந்தந்த ஸ்வரங்களின் இசைக்குப் பாடப்படுமாயின் அது சொற்கட்டு ஸ்வரம் என்னும் அணியாகும். (உ - ம்) ஆனந்த நடன பிரகாசம் - கேதாரம் - முத்துசுவாமி தீக்ஷிதர்.

சொற்கட்டு ஸ்வரங்கள் நர்த்தன சம்பந்தமுள்ள தேவர்கள், தேவதைகள் மீதுள்ள உருப்படிகளில்தான் பொருத்தமாக வரலாம். கணபதி, கிருஷ்ணர், நடராஜர் போன்றவர்களின் மீதுள்ள கீர்த்தனங்களில் சொற்கட்டு ஸ்வரங்களைக் காணலாம்.

4. **சொற்கட்டு சாகித்தியம்** :—சாகித்தியத்தின் நடுவே சொற்கட்டுகள் வருமாயின் அது சொற்கட்டு சாகித்தியம் என்னும் அணியாகும். இதில் இரு பிரிவுகள் உள்ளன :—

(1) சொற்கட்டுகள் சொல்லணியாக மட்டும் வருதல் (உ-ம்) நடனம் செய்யும் பாதனூர்—கேதார கௌளம்—ராமசுவாமி சிவன்.

(2) சொற்கட்டுகள் சொல்லணியுடனும் பொருளணியுடனும் கலேடையாக வருதல். (உ-ம்) ஆடிய பாதா - சங்கராபரணம் - கோபாலகிருஷ்ண பாரதி.

மற்ற பாஷைகளில் உள்ள பாட்டுக்களில் இப்மாதிரி இருபொருளுடன் விளங்கும் சொற்கட்டு சாகித்தியத்தைக் காண்பது அரிது. சொற்கட்டு சாகித்தியங்களுக்கு அருணகிரி நாதரின் திருப்புகழில் மிகுதியான உதாரணங்களைக் காணலாம். (உ-ம்) சினத்தவர் முடிக்குப்; பனியின் விந்துளி.

5. **மகுட சாகித்தியம்** :—ராக மாலிகைகளில் ஒவ்வொரு சரணத்தின் கடைசியிலும் பல்லவி ராகத்திலுள்ள அரையாவர்த்த அல்லது ஓராவர்த்த சிட்டை ஸ்வரத்தைப் பாடிப் பல்லவி எடுத்தல் கானக்கிரமமாகும். அந்தப் பல்லவி ராக ஸ்வரத்திற்கு, மகுட ஸ்வரம் என்று பெயர். அப்படிப் பட்ட மகுட ஸ்வரத்திற்கு ஒரு சாகித்தியம் இருப்பின், அது மகுட சாகித்தியம் என்னும் அணியாகும். சிட்டை ஸ்வரங்களுக்குச் சாகித்தியம் உள்ள ராக மாலிகைகளில்தான் மகுட சாகித்தியத்தைக் காணலாம். (உ-ம்) பன்னகாத்ரீச - ராக மாலிகை.

6. **சங்கதி** :—சங்கதி என்பது இசையணிகளில் மிகச் சிறந்ததோர் அணியாகும். சங்கதி

களைக் கிருதிகளில் பார்க்கலாம். சங்கதிகளை இருவகையாகப் பிரிக்கலாம் :—

(1) ராக பாவத்தை விளக்குவதற்காக உள்ளவை. (உ-ம்) மால் மருகனே-பிலகரி - ராம சுவாமி சிவன்.

(2) சாகித்தியத்தின் உட்கருத்துக்களை விளக்குவதற்காக ஏற்பட்டவை. (உ-ம்) வினையை கொனி அனுபல்லவி-பிரதாபவராளி—தியாக ராஜ சுவாமிகள்.

சாகித்திய சம்பந்தமான அணிகள்

1. மத்திம கால சாகித்தியம் :— மத்திம கால நடையிலமைந்துள்ள பாகம். ஒரு கீர்த்தனத்தின் முந்திய பாகம் முதல் காலத்தில் அமைந்து பிந்திய பாகம் மத்திம காலத்தில் அமைந்திருப்பின், மத்திம கால பாகம் வரும் பொழுது கேட்க மிக்க சுவையாயிருக்கும். (உ-ம்) இன்னமு மொருதரம் - கேதார கௌளம்—கோபால கிருஷ்ண பாரதி.

2. கோபுச்ச, சுரோதோவஹ யதிகளுடன் கூடிய சாகித்தியம் :—

(உ-ம்) ஸத்குண நிதிசந்தர—காம்போதி—பல்லவி.

அடுத்தானை—யதுகுல காம்போதி - அப்பர்.

3. ஸ்வராக்ஷரம் :—ஸ்வரமும் அதே எழுத்து சாகித்தியத்திலும் கூடிவருதல், (உ-ம்) ஸரிக பாகா-பல்லவி-மோகனம்.

ஸ்வராக்ஷர அணி இருவகைப் படும் :—

(1.) சுத்த ஸ்வராக்ஷரம் :— ஸ்வரங்கள் தங்களுக்கேற்பட்ட உயிர் மெய் எழுத்துக்களுடனேயே தோன்றுதல். உதாரணம் மேலே சொன்ன பல்லவி.

(2.) ஸஹித ஸ்வராக்ஷரம்:—ஸ்வர எழுத்துக்களின் உயிர்கள் மட்டும் மாறி அல்லது, உயிர்கள் அவ்வாறே இருந்து மெய்யெழுத்துக்கள் அதன் வர்க்கத்தைச் சேர்ந்த எழுத்துக்களுடன் தோன்றுதல். (உ-ம்) துருஸ்கா (சாவேரி). சியாமாசாஸ்திரி காமபாலினீ; மீனலோ சனப்ரோவ - தன்யாசி - சியாமா சாஸ்திரி.

4. ராக முத்திரை :— ராகத்தின் பெயர்கள் சாகித்தியத்தில் பொருள் படத் தோன்றுதல். (உ-ம்) சங்கராபரணனே—என்ற பல்லவி.

5. மணிப் பிரவாள சாகித்தியம் :—உருப்படியின் சாகித்தியம் இரண்டு அல்லது மூன்று பாஷைகளில் இலக்கணம் வழுவாமல் பொருள் பட வருதல். (உ-ம்) ஸ்ரீதியாகராஜ சுவாமி வாசஸ்பதி நீஸரிஸமான—பைரவி.

6. அந்தியப் பிராசம் யமகம் முதலிய அணிகள் :- (உ-ம்) கனகசபாபதி தரிசனம்—நந்தனார் சரித்திரம். க்ரகபலமேமி-ரேவகுப்தி—தியாக ராஜர். மனஸாவ்ருதா—ஆபோகி—பட்டணம் சுப்பிரமணிய ஐயர்.

பரத சாத்திரத்தின் வரலாறும் அதன் உட்பிரிவுகளும்

திரு. க. பொ. கிருஷ்ணமூர்த்தி பிள்ளை அவர்கள்
(தலைமை ஆசிரியர், சென்னைத் தமிழிசைக் கல்லூரி)

ஞான வடிவினனாகிய இறைவன் பண்டைக் காலத்தில் தன் அருட்சத்தியினால் உலகின்கண்ணே உள்ள உயிர்த்தொகுதிகளைப் படைத்து, அவை அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களையும் முறையே அடைதற்காக வேதம் ஆகமம் புராணம் அறுபத்துநான்கு கலைகள் முதலியவற்றை ஆக்கியருளியுள்ளார். மக்கள் அவற்றின் வழியே ஒழுகிப் பிறப்பின் பயனைப் பெறுதல் வேண்டும் என்பது அவ்விறைவனது திருவுளக் குறிப்பாகும். இவ்வறுபத்து நான்கு கலைகளுள் தலைசிறந்து விளங்குவதும், கலைவாணர்களாலும் கலா ரசிகர்களாலும் போற்றிப் புகழப்படுவதும் நம் பரத சாத்திரக் கலையே என்பது யாவரும் அறிந்தது.

அன்றி, நம் நாட்டின் கண்ணே சிறப்புற்று விளங்குவதும், சிதாகாசம் என்று பெயர் பெற்றதுமான சிதம்பரம் முதலிய தலங்களில் எம்பெருமான் தாண்டவமூர்த்தியாய் எழுந்தருளி அன்பர் குழாங்களுக்குக் காட்சியளிப்பதே இச் சாத்திரத்தின் தொன்மையையும் மேன்மையையும் மக்களுக்கு வெளிப்படையாக எடுத்துக் காட்டுவதாகும். இக் காரணத்தாலேயே இறைவனுக்குத் தாண்டவமூர்த்தி, கூதப் பெருமான், ஆடிய பாதர் முதலிய சிறப்புப் பெயர்களைப் பாடல்களில் அமைத்துப் பாடுவதோடல்லாமல் அத் திருவுருவத்தின் தத்துவ நுணுக்கங்களை உணர்ந்தும் வழிபாடு செய்து வருகின்றார்கள்.

இக் கலைக்குப் பதினெண்மர் தலைவர் என்றும், அவர்கள் பதினெண்வகைப் பரதங்கள் உண்டாக்கினரென்றும் அவற்றின் வழி நூலாகப் பரதசாத்திரம் தோன்றிற்று என்றும் அறிகின்றோம். ஆதியில் தமிழில் பரதம், சயந்தம், செபிற்றியம், பரத சேனாபதியம், குணநூல் முதலிய பல நூல் வகைகள் இருந்தன. ஆரியத்திலும் தெலுங்கிலும் சில நூல்கள் இருக்கின்றன. இவற்றுட் பெரும்பாலானவை மறைந்துபோயின. இப் பரதநூற் பயிற்சி சரித்திர காலங்கட்கு எட்டாத மிகத் தொன்மையான காலந் தொட்டு இருப்பினும் இடைக்காலத்தில் குறைந்து போய் இப்பொழுது வளர்ச்சியடைந்து வருகின்றது. ஆயினும் பயிற்சியும் அநுபவமும் உள்ள ஆசிரியர் இல்லாமல் இந் நூல்களைக் கற்று ஒருவரும் பயனடைதல் இயலாது என்பது திண்ணம். பாவம், இராகம், தாளம் ஆகிய இம் மூன்றின் சேர்க்கையே பரத சாஸ்திரமாகும். இதனை "பாவமோ டிராகந் தாளம் இம் மூன்றும் பகர்ந்திடும் முறையினற் பரதம்" எனவரும் திருவிளையாடற் புராணச் செய்யுட்பகுதியால் விளங்கக் காணலாம்.

பாவம்.

பாவமாவது ஆண் பெண் இருபாலாருடைய மனத்திலுண்டாகும் இன்ப துன்ப உணர்ச்சிகளைச் சாடைகளால் எடுத்துக் காட்டுவதாகும். இப் பாவம் நான்கு வகைப்படும். அவை (1) விபாவம். (2) அநுபாவம். (3) வியபசாரி பாவம். (4) சாத்விக பாவம் என்பன. மேற்சொன்ன நான்கு வகைப் பாவங்களும் கலந்து வருவது சஞ்சாரி பாவம்

என்று சொல்லுவர். இப் பாவம் அர்த்தம், இரசம் என இரு வகைப்படும்.

அர்த்தமாவது :— இசைப் பாட்டுக்களின் பொருள்களை வெளிப்படுத்தி யுரைப்பது.

இரசமாவது :— அப் பொருளோடு நாயக நாயகிகளின் கருத்தில் தோன்றும்சுவை எனப்படும். இச் சுவை நகை, அழுகை, இளிவரல் மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை, நடு நிலை எனஒன்பது வகைப்படும்.

மேற்கூறிய அர்த்த ரச பாவங்கள் தோன்ற நடிப்பவர்கள் அங்கம், பிரத்யாங்கம், உபாங்கம் என்வரும் மூன்று அங்கசேட்டைகளாலும் பாவங்களைக் காண்பிப்பார்கள்.

அங்கமாவது—தலை முதல் கால் வரையு முள்ள இதற்குரிய முக்கியமான ஏழு உறுப் புக்களை அசைத்து நடிப்பது.

பிரத்தியாங்கமாவது :—கழுத்து, தோள் முத லிய பன்னிரண்டு உறுப்புக்களின் அசைவு தோன்ற நடிப்பது.

உபாங்கமாவது :—கண், புருவம், கழுத்து மு தலிய ஒன்பதுவகை உறுப்புக்களின் அசைவு தோன்ற நடித்துக் காட்டுவது.

இராகம்

இராகமாவது :— சாமவேதத்தினின்றும் தோன்றி ஏழு சுரங்களாய் பிரகிருதி, விகிருதி பேதங்களினால் நாத தத்துவமாய் விளங்கி, சம்பூரண சன்னியங்களாகியும், பாஷாங்க, இராகாங்க, உபாங்கமாயும் இராகார்ணவம் என்ற பெயர் வாய்ந்து, விலங்கு பறவை குழந்தைகள் முதலியவற்றையும் தன்வயப் படுத்து மென்பர். உதாரணமாகத் திணைமாலை நூற்றைம்பது என்னும் நூலில் வரும் வெண் பாவில்''சாந்தம், கமழக் கிளிகடியும் கார்மயி லன்னாள், இமிழக் கிளிஎழா ஆர்த்து'' என வரும் பகுதியினால் அறியக் கிடக்கின்றது. ஆகவே இது இகத்திலும் பரத்திலும் இன்பத் தைக் கொடுத்து விளங்குமென்று கூறலாம். இவ்விராகங்கள் 5090 என்றும், 11991 என் றும் பலவாருகக் கூறப்பட்டுள்ளன.

தாளம்

தாளமாவது :—கைபினலாவது, கருவியினு லாவது தட்டுவதாகும். இது காலம், செய்கை, அளவு என்ற மூன்றினலும் உண்டாகின்றது. இதனை, ''கொட்டும் அசையும் தூக்கும் அள வும் ஒட்டப் புணர்ப்பது பாணி யாகும்'' என வரும் சிலப்பதிகார உரை மேற்கோளினால் நன்கு அறியலாம். பாணி, தாளம் என்பன ஒருபொருள் சொற்கள். இத்தாளம் ½ மாத்தி ரையுள்ள ஏகதாளம் முதல் 16 மாத்திரை யுள்ள பார்வதிலோசனம் ஈறாக 41 என்பர். வழக்கில் 5,7,8,5108,175 எனப் பல பிரிவு களாயுள்ளன. மேலும் தாள தசப்பிராணன் என்னும் பிரமாணத்தின் வழியாய்ச் சோட சாங்கங்களாகி அங்கசிரோணி, மத்திய சிரோணி, பாதாள சிரோணி ஆகிய இவற் றின் வழிபால் கணக்கில்லாத பேதங்களை உடையதாயும் தாள சமுத்திரம் என்று பெரி யோர்களால் கூறப்பட்டும் சிவசத்தி சொரூப மாக விளங்குகின்றது.

மேற்கூறிய பாவம், இராகம், தாளம் என் னும் மூன்றினல் நிகழ்வதே பரதமென்பர். இப்பரதம் நாட்டியம், நிருத்தம், நிருத்தியம் என மூன்று வகைப்படும். இவற்றுள்,

நாட்டியம்

நாட்டியமாவது:— தேவ நாட்டியம், மானுட நாட்டியம் என இருவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பழைய கதைகளைத் தொடர்வு பெற அமைத்து, அக் கதைகளுக்கு உரியவர்களின் வேடம் தரித்துக் கொண்டு, அக் கதையை அறியாதவரும் அறிந்து நல் வழிப்பட வேண்டிப் பலர் கூடி நடிப்பது நாட்டியமாகும். இதனை ஆண் பெண் இரு பாலாரும் சேர்ந்து நடிப்பதும் உண்டு. தமி ழர் இதனை இயல் இசை நாடகம் என்னும் மூத்தமிழில் நாடகத் தமிழின் பாற்படுத்திக் கூறுவர். இது இராமநாடகம், அரிச்சந்திர நாடகம் போல்வதாகும்.

அன்றியும், இது இராகம், தாளம் இரண் டுடன் கூடி, பாவமில்லாமல் வெளிப்படை யாக அலங்காரங்களினலும் வார்த்தைகளி னலும், பாடல்களினலும் உணர்வு தோன்ற நடிப்பதாகும். இதில் நாயக நாயகி பாவ மாகிய இரசபாவம் முற்றிலும் தோன்றுவ தில்லை. இஃதில்லையேல் அபிநயமாகிய குறிப் புக்களும் இல்லை. இதனையே ஆங்கிலேயர் 'டிராமா' என்று சொல்வர்.

நிருத்தம்

நிருத்தபாவது :— இரச பாவ மில்லாமல் கை, கால் முதலிய உறுப்புக்களின் அசைவி னல் இராக தாளம் முதலியவற்றுடன் நடிப்ப தாகும். இதில் வாக்கால் பாடல்களும் கைக ளினல் தாள லயங்களும், கால்களினல் சாரி பேதங்களும் காணப்படும். இதனைச் சுத்த நிருத்தமெனவும், சொக்க நிருத்தம் எனவும், இவைகளுக்கு வழங்கும் கைகளை நிருத்தக் கை எனவும் தமிழ் நூலார் கூறுவர். இவை சதுரச்சிரம் முதல் வலிதை ஈறுய் முப்பது வகையாகச் சொல்லப்பட்டுள்ளன. தேவர் களில் அயிராணி, துர்க்கை, முருகன், திரு மால், மன்மதன், திருமகள், சிவன் இவர் களால் நடிக்கப்பட்ட கடையம், மரக்கால், குடை, துடி, குடம், அல்லிய :, மல், பேடு, பாவை, பாண்டுரங்கம், கொடுகொட்டி, ஆகிய பதினெரு ஆடல்களும் இந்த நிருத்தத் தின்பால் அடங்கும். கொடுகொட்டியைப் பற்றிக் கலித்தொகையில் ''படுபறை பல வியம்பப் பல்லுருவம் பெயர்த்துநீ, கொடு கொட்டி ஆடுங்கால்'' எனக் கூறும் பாத் தொடர்கள் விளக்கிக் காட்டுகின்றன இத னல் பழந்தமிழ் மக்கள் மேற்கூறிய ஆடல் வகைகளைக் கையாண்டு வந்துள்ளார்கள் என் பது புலனுகின்றது. இதனைத் தேவவிருத்தி எனவுங் கூறுவர்.

இதனுள் அடங்கும் வினைதைக் கூத்துக் களும் பலவாம். அவை:—குரவை, கலி நடம், காணம், நோக்கு, தோற்பாவை என்பன வாம். ஆங்கிலேயரின் சர்க்கஸ், டான்ஸ் இவை கள் இதனுள் அடங்கும்.

நிருத்தியம்

நிருத்தியமாவது:--பாவம், இராகம், தாளம் என்னும் மூனறும் நிரம்பப் பெற்று அங்கம், பிரத்தியாங்கம், உபாங்கம் என்பவைகளினல் உலகங்களின் பல பிரிவான தேசங்கள், உயிர்கள், அவற்றின் கருத்துக்கள், உயிரில் லாதனவாகிய பிற வகைகள் எல்லாம் நன்கு புலப்பட அபிநயித்து நடிப்பதாகும். கை சென்றவழிக் கண்ணும், கண் சென்றவழிக் கருத்தும், கருத்துச் சென்றவழி ரசமும், கால் சென்ற வழித் தாளமும், சொல் சென்ற வழி இராகமும் மிக வல்லபமாகக் காணப்படும். இந்த நிருத்தியம் செய்கைகளினல் பாவத் தைக் குறிப்பிப்பதால் தமிழர் இதனை அபி நயக் கூத்தென்பர்.

இது அங்கம், வாசிகம், ஆகார்யம், சாத்வீகம் என நான்கு வகைப்படும்.

அங்காபிநயமாவது:—மூன் கூறிய அங்கம் பிரத்தியாங்கம், உபாங்கம் என்ற மூன்றி னலும் ஒன்பதுவகை ரசபாவங்களையும் குறிப் பது. இதில் கண்கள் 11 வகைச் சாடை யுடன் அமைய வேண்டும். கை வகைகள் ஒற்றைக் கை, இரட்டைக் கை என இரண் டாம். அவற்றுள் ஒற்றைக் கையில் 33 வகை யும், இரட்டைக் கையில் 15 வகையும், கழுத் தில் 7 வகையும் உண்டு. ஒற்றைக் கை இரட் டைக் கை என்பன அசம்யுக்தம், சம்யுக்தம் எனவும் கூறப்படும். இவ் வங்கங்கள் எல்லா வற்றலும் உலகத்தோர் கொண்ட கருத்துக் களைக் குறிப்புச் செய்து காட்டுதல்வேண்டும்.

வாசிகாபிநயமாவது :— வார்த்தைகளாலும், பாடல்களாலும் அப் பாவங்களைக் குறிப்பிப் பது. இது உட்சொல் புறச்சொல், ஆகாயச் சொல் என மூவகைப்படும். இவற்றுள் உட் சொல்லாவது நெஞ்சொடு கூறுதல். புறச் சொல் கேட்போர்க்குக் கூறுதல். ஆகாயச் சொல் தானே கூறுதல்.

